# சமாதானத்தைக் கட்டியெழுப்ப இலங்கைக்கு ஜப்பான் ஆதரவு

**'இலங்கையில் 30 வருட காலத்திற்கு மேலாக இடம் பெற்று வந்த உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்ததில் இருந்து ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையிலான பொருளாதார உறவுகள் மேலும் நெருக்கமடைந்துள்ளன' என்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஜப்பானிய வெளிநாட்டு அமைச்சர் ரறோ கோனோ தெரிவித்துள்ளார். அவர் எமக்கு வழங்கியுள்ள பேட்டி:**

## இலங்கைக்கு விஜயம் செய்த ஜப்பானிய வெளிநாட்டமைச்சர் அளித்த பேட்டி



**கேள்வி: கடந்த 2003 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையிலான 15 வருட காலப் பகுதியில் ஜப்பானிய வெளிநாட்டு அமைச்சரால் இந்த விஜயம் முதலாவதாக மேற்கொள்ளப்பட்டுள்ளதால், இதன் குறிக்கோள் மற்றும் நோக்கம் பற்றி கூறமுடியுமா?**

**பதில்:** ஆசியா மற்றும் மத்திய கிழக்கு ஆபிரிக்கா ஆகியவற்றை இணைப்பதற்கான முக்கிய கடற்பாதை முனையொன்றில் இலங்கை அமைந்திருப்பதால் பூகோள அரசியல் ரீதியாகவும் மூலோபாய ரீதியாகவும் மிகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததோர் நாடாக விளங்குகின்றது. மேலும், அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ள நிலையான பொதுப் பாதுகாப்பு மற்றும் உயர் பொருளாதார வளர்ச்சி காரணமாக, இலங்கை மேலும் அபிவிருத்தி அடையக் கூடிய ஏது நிலையைக் கொண்டுள்ள நாடொன்றாகவும் காணப்படுகின்றது. இதனைக் கருத்திற் கொண்டே, இருதரப்பு உறவை மேலும் கட்டியெழுப்பும் வகையில் 2018 ஆம் ஆண்டில் நான் முதலாவதாக விஜயம் மேற்கொள்ளவுள்ள நாடுகள் மத்தியில் இலங்கையைத் தெரிவு செய்துள்ளேன்.

இலங்கை இந்து சமுத்திர பிராந்தியத்தில் சர்வதேச மையமாக அபிவிருத்தி அடைந்து வருவதனால், அது இத்தகைய சூழ்நிலையில் அதி முக்கியத்துவம் வாயந்ததாகத் திகழ்கின்றது.

கடல்சார் நாடுகளென்ற வகையில், ஜப்பானும் இலங்கையும் சுதந்திர மற்றும் திறந்த இந்து பசுபிக் மூலோபாயத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் அபிவிருத்தியையும் செழுமையையும் அடைந்து கொள்ளவும், அதனை அடைவதிலான பொறுப்புக்களை ஏற்று செயற்படவும் முடியும். துறைமுக அபிவிருத்தி போன்ற தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு செயற்திட்டங்கள் மூலம் தொடர்பை அதிகரித்தும் கடல்சார் பாதுகாப்புக்கான ஒத்துழைப்பைப் பலப்படுத்தியும் இலங்கையுடன் கைகோர்த்து பிராந்தியத்தில் அமைதியையும் அபிவிருத்தியையும் மேலும் மேம்படுத்த ஜப்பான் திடசங்கற்பம் பூண்டுள்ளது. எனது விஜயத்தின் போது, சுகாதாரக் கவனிப்பு மற்றும் சுற்றாடல் துறைகளிலான ஒத்துழைப்பை எவ்வாறு பலப்படுத்துவது மற்றும் தேசிய நல்லிணக்கச் செயல்முறைக்கும் வட கொரியா விவகாரம் உள்ளிட்ட பிராந்திய மற்றும் சர்வதேச சூழ்நிலைகளுக்கும் எவ்வாறு ஆதரவளிப்பதென்பது குறித்து இலங்கைத் தரப்பினருடன் கலந்துரையாடவுள்ளேன்.

இந்த விஜயமானது, நாட்டுத் தலைவர்களின் பரஸ்பர விஜயங்களை மேலும் அதிகரிக்கவும் ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையிலான இருதரப்பு உறவை மேலும் ஆழமாக்கவும் பெரிதும் உதவுமென நான் நம்புகின்றேன்.

**கேள்வி: ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையிலான தற்போதைய இரு தரப்பு உறவுகளை நீங்கள் எவ்வாறு மதிப்பிடுகின்றீர்கள்?**

**பதில்:** ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையேயான சிநேகபூர்வ உறவானது, கடந்த 1951 ஆம் ஆண்டில் நடைபெற்ற சான்பிரான்சிங்கோ சமாதான மாநாட்டில் ஜப்பானின் இறைமைசார், உரிமைக்கு ஆதரவாக முன்னாள் நிதியமைச்சராகவும் பின்னர் ஜனாதிபதியாகவும் கடமையாற்றிய ஜே. ஆர். ஜயவர்தன அவர்களின் உரையின் மூலமே தோற்றுவிக்கப்பட்டது. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர், ஜப்பான் சர்வதேச சமூகத்துடன் மீண்டும் இணைந்து கொள்வதற்கு ஆதரவாக அமைந்த இந்த உரையை ஜப்பானியர்கள் இன்னமும் நினைவு மீட்டிப் பார்த்த வண்ணமேயுள்ளனர். அந்தக் காலம் தொட்டே, இரு நாடுகளும் நட்புறவு மற்றும் ஒத்துழைப்புப் பாதையில் தொடர்ந்தும் பயணித்தே வந்துள்ளன. இன்று வரை, ஒரு ட்ரில்லியன் யென் கடனுதவி (சுமார் 1.35 ட்ரில்லியன் ரூபா), அண்ணளவாக, 200 பில்லியன் மானியங்கள் உதவி ( 270 பில்லியன் ரூபா), தொழிநுட்ப ஒத்துழைப்புக்கு 80 பில்லியன் யென்னுக்கு மேற்பட்ட தொகை (108 பில்லியன்), மற்றும் 1,000 க்கும் மேற்பட்ட ஜப்பான் வெளிநாட்டு ஒத்துழைப்புத் தன்னார்வத் தொண்டர்கள் என நிதி மற்றும் ஆளணி உதவிகளை வழங்கியதன் மூலம் ஜப்பான் இலங்கையில் சமூக மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு மற்றும் மனிதவள அபிவிருத்திக்கென பங்களிப்புச் செய்துள்ளது. இவற்றுக்கு மேலாக, இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்கும் ஜப்பான் ஊக்கமளிக்கும் வகையில் ஆதரவளித்துள்ளது. கடந்த இருபது வருடங்களில் ஜப்பானியப் பிரதமர் ஒருவர் இலங்கைக்கு முதற் தடவையாக மேற்கொண்ட அரசு முறைப்பயணமாகக் கருதப்படும் பிரதமர் ஷின்ஸோ அபேயின் 2014 செப்டெம்பர் விஜயம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஜப்பானுக்கான 2016 மே விஜயம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஜப்பானுக்கான 2017 ஏப்ரல் விஜயம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட இரு நாடுகளுக்குமிடையிலான 'விரிவான பங்காண்மைத்துவத்தின்' கீழ், வர்த்தகம் மற்றும் முதலீடு,கடல்சார் ஒத்துழைப்பு,பரிமாற்றுங்கள் ஆகியவை மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த உறவினை மேலும் பலப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளநான்திடசங்கற்பம்பூண்டுள்ளேன்.

**கேள்வி: இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஜப்பானிய முதலீடுகளின் எதிர்பார்க்கப்படும் அளவுத் திட்டமும் வாய்ப்பும் என்ன?**

**பதில்:** இலங்கையில் 30 வருட காலத்திற்கு மேலாக இடம்பெற்று வந்த உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்த காலம் தொட்டு ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையிலான பொருளாதார உறவுகள் மேலும் நெருக்கமடைந்துள்ளன. இப்போதெல்லாம், ஜப்பானும் இலங்கையும் 100 பில்லியன் ஜப்பானிய யென்னுக்கும் (அண்ணளவாக 170 பில்லியன்) அதிகமான வருடாந்த இருதரப்பு வர்த்தகத்துடன் கூடிய முக்கியமான பொருளாதார மற்றும் வர்த்தகப் பங்காளிகளாக இருந்து வருவதுடன், 130 க்கும் மேற்பட்ட ஜப்பானிய நிறுவனங்கள் இலங்கையில் கால்பதித்துள்ளன.

இலங்கையில் துறைமுக அபிவிருத்தி போன்ற உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டங்கள் இந்து பசுபிக் பிராந்தியத்திலான இணைப்பை அதிகரிப்பது குறித்த பார்வையிலிருந்து நோக்கும்போது இன்றியமையாததாகும். ஜப்பான் உதவி கிடைக்கப்பெறும் நாட்டின் வெளிப்படைத் தன்மை, பொருளாதார வினைத்திறன் மற்றும் நிதிசார் வல்லமை போன்ற சர்வதேச நியமங்களை அடிப்படையாகக் கொண்டுள்ள தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு செயற்திட்டங்களை மேம்படுத்தி வருகின்றது.

மேலும், இலங்கைத் திருநாடு இயற்கை எழில் மற்றும் உலகப் புகழ்பெற்ற 8 பாரம்பரிய பிரதேசங்கள் போன்ற கண்கவர் சுற்றுலாத் துறை மையங்களுடன் விளங்கி, உலகின் நாலா பக்கங்களிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிக் கவர்ந்திழுக்கும் வனப்புமிக்கதோர் நாடாகும். வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த 2009 இல் நடைபெற்ற யுத்தம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து அதிகரித்துள்ளதாக நான் அறிகின்றேன். அண்மைக்காலமாக, இலங்கைக்கு வருகை தரும் ஜப்பானிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் வருடமொன்றுக்கு 40, 000 க்கும் மேற்பட்டதாக அதிகரித்துள்ளது. அத்துடன், இலங்கையில் சுற்றுலாத்துறையானது முதலீடுகளுக்கான நம்பிக்கையூட்டும் துறையொன்றென நான் நினைக்கின்றேன்.

இந்த மாதம் ஜப்பானிய வர்த்தகம் மற்றும் கைத்தொழில் சபையைச் சேர்ந்த பாரிய அளவிலான (சுமார் 100 உறுப்பினர்கள்) வர்த்தகத் தூதுக் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது. இந்த வர்த்தகத் தூதுக்குழு உள்ளிட்ட பல்வேறு பரிமாற்றங்கள் மூலம் இலங்கைக்கான ஜப்பானிய முதலீடுகள் மேலும் அதிகரிக்குமென நான் எதிர்பார்க்கின்றேன்.

**கேள்வி: வடகொரியா குறித்து தற்போது காணப்பட்டுவரும் பதற்ற சூழ்நிலை ஜப்பானுக்கு எத்தகைய பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது? சமாதான அரசியலமைப்பைக் கொண்டு விளங்கும் ஜப்பான், எத்தகைய கொள்கைகளை முன்னெடுத்தும், வகிபாகங்களைக் கொண்டுள்ளது?**

**பதில்:** கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக, வடகொரியா தன்னால் இதற்கு முன்னரெல்லாம் மேற்கொள்ளப்பட்டிருந்த அணுவாயுதப் பரிசோதனைகளைப் பார்க்கிலும், கடந்த செப்டெம்பரில் மேற்கொண்ட மிகப் பெரிய பரிசோதனை உள்ளிட்ட மூன்று பரிசோதனைகளை நடாத்தியுள்ளதுடன் மட்டுமன்றி, ஜப்பானுக்கு மேலாக இரண்டு கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் போன்ற 40 ஏவுகணைகளையும் ஏவி விட்டுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தம் முடிவுற்றதையடுத்து இலங்கை - ஜப்பான் பொருளாதார உறவு மேலும் நெருக்கம்

## 130 இற்கு மேற்பட்ட ஜப்பானிய நிறுவனங்கள் இலங்கையில் கால்பதிப்பு.

## சுற்றுலாப் பயணிகளின் வருகை யுத்த முடிவுக்குப் பின்னர் அதிகரிப்பு